செப்டம்பர் மாதம் இது திராவிட மாதம்!

மார்கழி மாத அதிகாலையில் வைணவத் திருக்கோயில்களில் திருப்பாவை ஒலிப்பது வழக்கம். சைவத் திருக்கோயில்களில் திருவெம் பாவை பாடப்படும். இரண்டு சமய நெறிகளும் போற்றுகின்ற மாதமாக மார்கழி அமையும். ரமலான் மாதம் முஸ்லிம்களின் நோன்பு மாதம். புனிதவெள்ளியும் ஈஸ்டர் திருநாளும் வருகின்ற மாதத்தில் கிறிஸ்தவர்கள் சிறப்புப் பிரார்த்தனை களை மேற்கொள்வார்கள். அவரவர் மார்க்கம் சார்ந்த சிறப்பு மாதங்கள் இருப்பதுபோல, திராவிட இயக்கத்திற்கான சிறப்பு மாதமாக செப்டம்பர் மாதம் அமைந்துள்ளது.

தலைமுறைகளின் இலட்சியக் கனவைத் தனது தொடர்ச்சியான போராட்ட செயல்பாடுகளால் நிறை வேற்றுகின்ற திராவிட இயக்கத்தின் வரலாற்றில் ஓர் ஆண்டின் 365 நாட்களுமே முக்கியமானவை தான். ஒவ்வொரு நாளிலும் ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வு நிச்சயம் இருக்கும். எனினும், செப்டம்பர் என்பதற்குக் கூடுதல் சிறப்பு உண்டு.

செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்தநாள். செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள். பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாள்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் பிறந்தது. இந்த மூன்றையும் இணைத்து முப்பெரும் விழாவா கக் கொண்டாடும் வழக்கத்தை முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கினார். இயக்கத்தின் கொள் கைகளை விளக்கிடும் வகையில் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவுகள் என 3 நாட்கள் திராவிடத் திருவிழாவாகக் கொண்டாடும் வழக்கத்தை முத்தமிழறிஞர் கலைஞர் முன்னெடுக்க, முப்பெரும் விழாவை செப்டம்பர் மாதத்தில் கழகம் தொடர்ந்து சிறப் பாகக் கொண்டாடி வருகிறது.

இயக்கத்திற்காக அரும்பாடுபட்ட கழக முன் னோடிகளைப் போற்றும் வகையில் பெரியார் அண்ணா கலைஞர் பாவேந்தர் பெயர்களில் விருதுகள் வழங்கும் வழக்கத்தையும் முத்தமி ழறிஞர் கலைஞர் உருவாக்கினார். விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கும் வழக்கமும் தொடர்வது டன் இனமானப் பேராசிரியர் பெயரிலும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெயரிலும் மேலும் 2 விருதுகளும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளன.

முப்பெரும் விழா நடைபெறும் நாள் மட்டு மல்ல, செப்டம்பர் மாதத்தின் 30 நாட்களுமே திராவிட மாதம்தான் என்பதை திராவிட இயக்கத் தால் பயன்பெற்று, அந்த நன்றியை மறவாதவர் கள் இணையதளத்தில் தொடர்ந்து பதிவிட்டு வந்தனர். செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப் பட்ட திராவிட இயக்கத்தின் முக்கிய முடிவுகள், தலைவர்களின் வாழ்வில் முக்கிய நிகழ்வுகள் உள்ளிட்டவற்றையும் எடுத்துக்காட்டினர். கலைஞர் ஆட்சிக்காலத்தில் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பல திட்டங்கள் தொடங்கப்பட் டது செப்டம்பர் 15ஆம் நாள்தான். இன்னும் பல சிறப்புகளும் திராவிட மாதமான செப்டம்பருக்கு உண்டு.

தலைநகர் சென்னையில் திராவிடக் கட்டடக் கலைக்குரிய முகப்புடன் கோட்டை போலத் திகழும் தி.மு.க.வின் தலைமை நிலைய அலுவலகமான அண்ணா அறிவாலயம் 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் நாள் திறக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு செப்டம்பர் முப்பெரும் விழாவின் போதுதான் இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையிலான மகத்தானப் பேரணியுடன் தேசிய முன்னணி தொடக்க விழா நடைபெற்றது. அதே முப்பெரும் விழா நேரத்தில் தான் அறிவாலயத்தில் கலைஞர் அரங்கம் திறக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாளன்று இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்களால் அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சியான கலைஞர் கருவூலம் திறந்து வைக்கப்பட்டது.

திராவிட இயக்கம் ஏறத்தாழ 115 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. அதில் திராவிடர் கழகம் 81 ஆண்டுகால வரலாற்றையும், திராவிட முன்னேற்றக் கழகம் 76 ஆண்டுகால வரலாற்றை யும் கொண்டவை. இவை இரண்டுக்கும் அடிப்படை யான சுயமரியாதை இயக்கம் நூற்றாண்டைக் கடந்திருக்கிறது. இந்த நெடிய அனுபவத்தின் வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைக்கு உணர்த்த வேண்டிய கடமை உள்ளது. அந்தக் கடமையை நினைவூட்டும் மாதம்தான், திராவிட மாதமான செப்டம்பர்.

கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

தேநீர்க் கடைப் பேச்சு முதல் மாநாட்டு உரை கள் வரை அனைத்து வகை பரப்புரைகளையும் மேற்கொண்டவை திராவிட இயக்கங்கள். திண் ணைப் பிரச்சாரம், பொதுக்கூட்டம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி எனக் காலத்திற் கேற்ற வகையில் தனது பரப்புரையின் அணுகு முறையைக் கைக்கொண்டன. புத்தாயிரம் (2000) ஆண்டுக்குப் பிறகு தகவல் தொழில்நுட் பத்தின் அதிவேக வளர்ச்சியும் அதன் பரவலும் ஜென்ஸி எனப்படும் இளம் தலைமுறையின ருக்கு புது உலகத்தை உருவாக்கிக் காட்டியிருக் கிறது. அந்த உலகத்திற்குள் பயணித்து, ஒரு நூற்றாண்டைக் கடந்த திராவிட இயக்க வரலாற் றையும் அதன் தாக்கங்களையும் இளம் தலை முறையினருக்கு உணர்த்த வேண்டிய பணியை மேலும் தீவிரப்படுத்த வேண்டிய தருணம் இது.

இன்றைய தலைமுறையினர் எதிலும் வேகமாக செயல்படுகின்றனர். அந்த வேகத்திலேயே வரலாற் றின் பக்கங்களை சரியாகக் கவனிக்காமல் புரட்டிவிடுகின்றனர். களைப்பு தெரியாமல் அவர் கள் வேகமாகப் பயணிக்கும் வகையில் காலத்தின் சாலையில் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் நிறைந்திருக்கின்றன. தங்கள் மீது வெயில் படாமல் இந்த மரங்களை நட்டது யார்? நமக்கு நிழல் தரும் வகையில் மரங்களை வளர்த்தது யார்? என்பதை அவர்கள் உணர்வதில்லை. நிழல் தரும் பாதைக்குக் காரணமானவர்களை மறந்து விட்டு, வேறு வகையான கவர்ச்சிப் போதை களுக்கு ஆட்பட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட தலைமுறையினரை மீட்டெடுக்க வேண்டிய கடமையும் திராவிட இயக்கத்திற்குத்தான் இருக் கிறது.

தி.மு.க என்பது சமுதாய மறுமலர்ச்சிக்கான அரசியல் இயக்கம். பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பாடுபடும். திராவிட மாதமான செப்டம்பர் மாதம் நம்மை நாமே புதுப் பித்துக் கொண்டு, நம்மைச் சுற்றியுள்ள சமுதா யத்தையும் சரிப்படுத்த வேண்டிய பணிகளைத் தொடங்குவதற்கு ஏற்ற மாதமாகும்.

'ரீல்ஸ்' உலகம்தான் 'ரியல்' உலகம் என்று வாழ் கிற தலைமுறையினரிடம், எளிமையான முறையில் திராவிட இயக்கக் கொள்கைகளையும், அதன் சாதனைகளையும், வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துச் சொல்லவேண்டிய தேவை அதிகமாக உள்ளது. ஒரு நிமிடத்தில் ஒரு செய்தியை சொல் லும் குறுங்காணொலிகள், சமூக வலைதளங்கள் வாயிலான உரையாடல்கள், நூலகங்களில் சந்திப் புகள், வாசிப்பு இயக்கங்கள், வீக் எண்ட் எனப் படும் வார இறுதி நாட்களுக்கான செயல்திட்டங் கள் உள்ளிட்ட பல்வேறு வகையிலான பணிகளை இந்த திராவிட மாதத்தில் தொடங்க வேண்டியது கட்டாயமாகிறது.

இளம் தலைமுறையினர் விரும்புகிற வடிவங் களில், அவர்களைச் சென்று சேரக்கூடிய இன்ஸ் டாகிராம், யூடியூப், ஷோர்ஷாட் உள்ளிட்ட தளங் களில், அவர்களுக்குப் புரியக் கூடிய சொற்களில் திராவிட இயக்க வரலாற்றையும் சாதனைகளை யும் வெளிப்படுத்த வேண்டும். அவர்களை ஈர்க்க வேண்டும். எதையும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக ஒளிவுமறைவின்றிப் பேசக்கூடியவர்களாக உள்ள இளந்தலைமுறை யினரிடம் உண்மை வரலாற்றைச் சொல்லிப் புரியவைத்தால், திராவிடத்தை நோக்கிய அவர் களின் தேடல் கூடும். அப்போது அவர்களிடையே மொழிப்பற்று, சமூக நீதி, மாநில உரிமை உள் ளிட்ட இலட்சியங்களை விளக்கிட முடியும். கவர்ச் சியை நம்பிய போலியான மாற்றம் தகர்ந்து, புரட்சிகர மாற்றம் நிகழும். திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தை அந்த உண்மையான மாற் றத்திற்கானத் தொடக்கமாகக் கொண்டு, ஆர்வ முள்ள அனைவரையும் ஒருங்கிணைத்து புதிய பயணத்தைத் தொடங்குவோம்.

பொய்களைப் பரப்பி அதன் மீது பதவி நாற் காலி போட்டு உட்கார்ந்து சுகம் காணும் கூட்டத் திற்கு மாற்றாக, உண்மையைக் கொண்டு வலுவான அடித்தளத்தைக் கட்ட வேண்டியவர் களாக திராவிட இயக்கத்தவர்கள் இருக்கிறார் கள். கடுமையான அந்தப் பணியைக் களத்தில் செய்ய வேண்டிய பொறுப்பு தி.மு.க.வின் தோள் களில் சுமத்தப்பட்டிருக்கிறது. பெரியார்அண்ணா கலைஞர் வகுத்த பாதையில் கழகத் தலைவர் திராவிட நாயகர் வழிகாட்டுதலில், கழகத்தின் இளம்தலைவர் - எதிர்க்கட்சித் தலைவர் துணை யுடன் பயணிப்போம்.

இலட்சியம் உயர்வானது. அதை அடைவதற் கானப் பாதை நெடியது. கொள்கை உறுதியுடன் பயணம் தொடரட்டும். வெல்லட்டும்.

ரேக்ளா பந்தயம் என்பது

வெறும் விளையாட்டு மட்டுமல்ல; அது நமது கொங்கு மண்ணின் அடையாளம்!

ரேக்ளா பிரியர்கள், விவசாயிகள், நாட்டு மாடு வளர்ப்போர் - இளைஞர்களுக்கு கார்த்திகேய சிவசேனாபதி வேண்டுகோள்!

கோவை, செப்.1-

ரேக்ளா பந்தயம் என் பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல அது நமது கொங்கு மண்ணின் அடை யாளம், கொங்கு மண்ட லத்தைச் சேர்ந்த ரேக்ளா பிரியர்கள், நாட்டு மாடு காப்பாளர்கள், விவசாயி கள் மற்றும் இளைஞர்கள் அனைவருக்கும் கழக சுற் றுச்சூழல் அணி செயலா ளர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி ஓர் அவசர வேண்டுகோள் விடுத் துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

சமீபகாலமாக நம்மி டையே ஏற்பட்டுள்ள சில கருத்து வேறுபாடுகள் மற் றும் மனக்கசப்புகளின் கார ணமாக, காவல் நிலையங்க ளில் புகார் அளிப்பதும், தனிப்பட்ட முறையில் நீதி மன்றத்தை அணுகி அனு மதி கோருவதும் போன்ற விரும்பத்தகாத சம்பவங் கள் நடைபெற்று வருகின் றன. நாமே தொடர்ந்து காவல் நிலையங்களையும் நீதி மன்றங்களையும் நாடும் சூழ்நிலை உருவா னால், அது நாளடைவில் மிகப்பெரிய சட்டப் பிரச் சினையாக மாறி, இறுதி யில் ரேக்ளா பந்தயங்க ளுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள் ளது.

பாரம்பரிய விளையாட்டு!

முன்னதாக ஜல்லிக் கட்டு தொடர்பான நிகழ் வுகளில் என்ன நடந்தது என்பதை நாம் அனைவ ரும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மி டையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரண மாக ஒருவர் மீது ஒருவர் நீதிமன்றத்தை நாடிய சூழ் நிலையைப் பயன்படுத்தி, நமது பாரம்பரியத்தை சீர் குலைக்க நினைத்த அந்நிய சக்திகள் ஜல்லிக்கட்டுக்கே தடை ஏற்படுத்திய சம்ப வத்தை நாம் மறந்துவிடக் கூடாது. அதே தவறை மீண்டும் செய்து, நமது பாரம்பரிய விளை யாட் டான ரேக்ளா பந்தயத் திற்கு நாமே பாதிப்பை ஏற் படுத்திவிட்டோம் என்ற நிலை வரலாற்றில் பதிவா காமல் பார்த்துக்கொள்வது நமது பொறுப்பு.

பாரம்பரியத்தின் அடையாளம் நாட்டு மாடுகள்!

ரேக்ளா பந்தயம் என் பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல. அது நமது கொங்கு மண்ணின் அடை யாளம். காங்கேயம் காளை இனத்தைப் பாதுகாப்பதற் கும், அதன் வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் முக்கி யமான ஒரு தளமாக அது விளங்குகிறது. லட்சக்க ணக்கான இளைஞர்க ளுக்கு உத்வேகத்தையும், ஆயிரக்கணக்கான விவசா யக் குடும்பங்களுக்கு வாழ் வாதார ஆதரவையும் வழங்கும் பாரம்பரியத்து டன் இது இணைந்துள்ளது.

சிந்துவெளி நாகரிகம் முதல் சமீபத்திய கீழடி அக ழாய்வுகள் வரையிலான வரலாற்றுச் சான்றுகளில், தமிழர் வாழ்வியலிலும் பண்பாட்டிலும் காளைக ளுக்கு இருந்த முக்கியத் துவம் வெளிப்படுகிறது. குறிப்பாக, திமில் கொண்ட நாட்டு மாடுகள் நமது பாரம்பரியத்தின் முக்கிய அடையாளங்களில் ஒன் றாக விளங்குகின்றன. கால நிலை மாற்றம் மற்றும் சுற் றுச்சூழல் சவால்கள் அதிக ரித்து வரும் இக்காலகட்டத் தில், நாட்டு மாடு இனங்க ளைப் பாதுகாப்பதும், அவற்றின் மரபணு வளத் தைப் பாதுகாப்பதும் மிக வும் அவசியமானதாகும்.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் ஒருங்கிணைந்த முயற்சி யால் பாதுகாக்கப்பட்டு வரும் நமது நாட்டு மாடு கள், மெல்ல மெல்ல வளர்ச்சி பெறத் தொடங்கி யுள்ளன. இந்தச் சூழ்நிலை யில், நமது ஒற்றுமை மிக வும் அவசியம். எனவே, அனைத்து ரேக்ளா அமைப் புகளின் நிர்வாகிகள், பெரி யவர்கள், விவசாயிகள், நாட்டு மாடு வளர்ப்போர் மற்றும் இளைஞர்கள் அனைவரும் காவல் நிலை யம் மற்றும் நீதி மன்றங் களை நாடும் நடவடிக்கை களைத் தவிர்த்து, முதலில் தங்களுக்குள் அமர்ந்து பேசி, கருத்து வேறுபாடு களை சுமூகமான முறை யில் தீர்த்துக்கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

காளைகளைப் பாதுகாப்பது நமது கூட்டுப் பொறுப்பு!

சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) கொங்கு மண்டலத்தின் பாரம்பரிய காங்கேயம் நாட்டு மாடு இனங்களையும், அவற்றின் முக்கிய மேய்ச்சல் நிலங்க ளான கொரங்காடுகளை யும் பாதுகாத்தல், மேம்ப டுத்துதல் ஆகிய பணிகளில் செயல்பட்டு வரும் ஒரு தொண்டு நிறுவனமாகும். நாட்டு மாடு வளர்ப்பு, பாரம்பரிய விவசாய முறை கள் மற்றும் நமது பண் பாட்டு பாரம்பரியத்தைப் பாதுகாப்பது தொடர்பாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் SKCRF, காங்கேயம் காளை இனத் தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது.

நமது பாரம்பரியத்தை யும், காங்கேயம் காளைக ளையும், ரேக்ளா பந்தயத் தையும் பாதுகாப்பது நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பு. கருத்து வேறு பாடுகளைத் தாண்டி, ஒற் றுமையுடன் செயல்பட்டு நமது பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டு என்று கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், சேனா பதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் (SKCRF) நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி ஓர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் சக்கம்மாள்புரம் தி.மு.க. கிளைக் கழகச் செயலாளரும் வ.உ.சி. துறைமுக முன்னாள் ஊழியருமான தாவீது இல்ல திருமண விழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சுடுகாட்டில் ரவுடி படுகொலை - கேளம்பாக்கத்தில் பயங்கரம்!

த.வெ.க. ஆட்சியில் தொடரும் கொலை - கொள்ளை!

திருப்போரூர். செப்.1-

சென்னை அருகே கேளம்பாக்கத்தில் உள்ள மயானத்தில் பிரபல ரவுடி வெட்டி படுகொலை செய் யப்பட்டு உள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது. சென்னையில் நடந்த கொலைக்கு பழிக் குப் பழியாக இது நடந் துள்ளதா என்று போலீசார் வி சா ரி க் கி ன் ற னர். சென்னை அருகே உள்ள கேளம்பாக்கம் ஜோதி நகரை சேர்ந்தவர் ஷாகுல் அமீது (27). இவர் அங் குள்ள கே.எஸ்.எஸ்.நகரை யொட்டி உள்ள மயானம் அருகே வெட்டி படு கொலை செய்யப்பட்டு கிடந்தார். அவரது முகம் கொடூரமாக சிதைக்கப் பட்டிருந்தது. இதுகுறித்து அறிந்ததும் கேளம்பாக்கம் போலீஸ் உதவி ஆணையர் ஜான்விக்டர், இன்ஸ்பெக் டர் தமிழன்பன் ஆகியோ ரின் தலைமையில் போலீ சார் சென்று விசாரித்து விட்டு பின்னர் ஷாகுல் அமீது உடலை மீட்டு செங் கல்பட்டு அரசு மருத்துவ மனைக்கு பிரேத பரிசோத னைக்கு அனுப்பி வைத்த னர்.

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்த னர். ஷாகுல் அமீது மீது பல்வேறு கொலை, கொள்ளை மற்றும் கொலை மிரட்டல், செயின் பறிப்பு, கஞ்சா விற்பனை உள்பட 20க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது. இவர் கிரேடு ஒன்று ரவுடி பட்டியலில் உள்ளார். சென்னை கொளத்தூரை சேர்ந்த பிரபல ரவுடி ஒரு வருடன் கூட்டாளியாக இருந்து, பல்வேறு குற்றச் சம்பவங்களை செய்துள் ளார். இதன்பின்னர் அவரு டன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு தனியாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுள் ளார். கடந்த 10 நாட்க ளுக்கு முன் சிறைக்கு இருந்து வெளியே வந்துள் ளார். இதன்பிறகு நண்பர் களுடன் நேற்று மாலை 6.30மணியளவில் மயான பகுதியில் மது அருந்தியுள் ளார். அப்போது ஷாகுல் அமீதை மர்ம நபர்கள் முகம் சிதைத்து கொலை செய்துவிட்டு தப்பியுள்ள னர். இவ்வாறு தெரியவந் துள்ளது.

இதுகுறித்து கேளம் பாக்கம் போலீசார் வழக் குபதிவு செய்துள்ளனர். ஷாகுல் அமீதை கொலை செய்ய பயன்படுத்திய பொருட்கள், பைக்குகள், ரத்த மாதிரிகள் உள்பட பல்வேறு தடயங்களை போலீசார் சேகரித்து ஆய் வுக்கு அனுப்பி வைத்துள் ளனர்.

கொளத்தூர் ரவுடியுடன் சேர்ந்து ஷாகுல் அமீது நடத்திய ஒரு கொலை தொடர்பாக அவரை பழிக்குப்பழியாக கொலை நடந்திருக்கலாம் என்று தெரிகிறது. ஏற்க னவே கொலை செய்யப் பட்ட நபரின் புகைப் படத்தை மர்ம நபரில் ஒரு வன் செல்போனில் வைத் திருந்து தனது கூட்டாளி களுடன் ஷாகுல் அமீது பழிக்குப் பழியாக கொலை செய்ய காத்திருந் ததும் முன்னர் செய்த கொலையைபோல் இவ ரையும் முகம் சிதைத்து கொலை செய்வோம் என்று அந்த மர்ம கும்பல் சபதம் எடுத்து ஷாகுல் அமீதை கண்காணித்து வந் ததாகவும் தெரிகிறது. எனவே, பழிக்குப்பழியாக கொலை நடந்ததா தனி யாக தொழில் நடத்திய தால் ஏற்பட்ட முன்வி ரோதம் காரணமாக கொலை நடந்துள்ளதா என்று பல்வேறு கோணங் களில் விசாரிக்கின்றனர். கொளத்தூர் ரவுடியை பிடிக்க தனிப்படை போலீ சார் விரைந்துள்ளனர்.

கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் பிறந்தநாளில் 300 நபர்களுக்கு 5 கிலோ அரிசி,100 நபர்களுக்கு சேலை மற்றும் கல்வெட்டுடன் கழக கொடி கம்பம் ஏற்றி சிறப்பு செய்த தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கடையம் வடக்கு ஒன்றியம் சேர்வைக்காரன்பட்டி ஊராட்சி அருணாசலம்பட்டி கழக மூத்த முன்னோடி டி.ஆர்.மகாலிங்கம் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ ஓய்வில் இருந்து வருவதை அறிந்து தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் அவரிடம் நலம் விசாரித்து பழங்கள் மற்றும் மருத்துவ உதவி தொகை வழங்கினார்.நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் மகேஷ் மாயவன், அவைத் தலைவர் ரவி,மாவட்ட பிரதிநிதிகள் ரவி சுப்பிரமணி, துரை பண்டியன்,அன்பழகன், ஆத்மா சேர்மன் குணசீலன், கழக வழக்கறிஞர் அரிகிருஷ்ணன் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் லட்சுமணன், பாக முகவர்கள் பாலமுருகன்,விடியல் ஆர்த்தி, ராஜபாண்டி,ராமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், தெற்குஆரைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த தந்தையை இழந்த பசுவந்தனை அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்று நீட் தேர்வில் 499 மதிப்பெண்கள் பெற்று விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் இணைய உள்ள மாணவி செல்வி.கார்த்திகாவை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் நேரில் அழைத்து மாணவியின் ஐந்து வருட கல்வி செலவையும் ஏற்றுக் கொள்வதாக கூறி வாழ்த்தினார்.